வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 08.07.2026 புதன்கிழமை இதழ் : 183 பக்கங்கள் : 08



# சிறையில் நவீன பாதுகாப்புக் கட்டமைப்பை முடக்க திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிச் செயல்!

### நீர்கொழும்பு வன்முறை குறித்து நீதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் நடந்த மோதல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள், சிறைக்குள் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்காக நிறுவப்பட்டுள்ள நவீன பாதுகாப்பு கட்டமைப்பை முடக்குவதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு சதிச் செயல் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜூலை 5 அன்று காலை 11 மணியளவில் நீர்கொழும்பு சிறைச்சாலையிலுள்ள

07

# துப்பாக்கிச் சூடு நடத்தாதிருந்தால் பெரும் விபரீதமே ஏற்பட்டிருக்கும்!

### நீர்கொழும்பு வன்முறைச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் விளக்கம்



கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் இருந்த கைதிகள் பிரதான பலகையினாலான நுழைவாயிலையும் உடைத்துக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றபோதே அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

பலகை நுழைவாயிலையும் உடைத்துக்கொண்டு கைதிகள் வெளியில் தப்பியிருந்தால், சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விபரீதங்களையும் அழிவுகளையும் இந்தத் தருணத்தில் மதிப்பிடவே முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்களில் பரவி வரும், பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நுழைவாயிலின் ஊடாக துப்பாக்கிச் சூடு நடத்தும் காணொளித் தொகுப்பு குறித்து விளக்கமளிக்கும் போதே அவர்

07

## உளவுத் தகவல் கிடைக்கவில்லை!

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் வன்முறையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எந்தவித உளவுத் தகவல்களும் கிடைக்கபெறவில்லை என பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவங்களை மையப்படுத்தி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

07

## சிறைச்சாலை வன்முறைக்கு அரசு பொறுப்பு கூறவேண்டும்

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 08

சிறைச்சாலைகளுக்குள் அண்மையில் ஏற்பட்ட பதற்ற நிலைமை மற்றும் இரண்டாவது கலவரத்தை கட்டுப்படுத்த தவறியமைக்கு தற்போதைய நீதி அமைச்சரும் அரசாங்கமுமே பொறுப்புக் கூறவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

07

## அனைத்துச் சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கும் அவசர கூட்டம்

கொழும்பு, ஜூலை. 08

நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறைச்சாலைகளின் சிரேஷ்ட அதிகாரிகளையும் விசேட கூட்டமொன்றில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை 7.30 மணிக்கு விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளதாக நீதியமைச்சர் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட

07

## தனியாருக்கு உரிய 25 ஏக்கர் காணியை மருதங்கேணியில் சுவீகரிக்க ஏற்பாடு!

### தடுக்க அனைவரையும் திரளுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 08

வடமராட்சி கிழக்கு மருதங்கணிப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான 25 ஏக்கர் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை

07

## சிறைச்சாலை சம்பவத்தில் அரசுக்கு தொடர்பு இல்லை!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை. 08

“நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவத்தில் ஆளுங்கட்சியின் அரசியல் தலையீடு எதுவும் இல்லை. எனவே, வெலிக்கடை சிறைச்சாலை சம்பவத்துடன், இதனை ஒப்பிடுவது தவறு.” என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

07

## நீர்கொழும்பிலிருந்து 60 கைதிகள் யாழ்ப்பாணச் சிறைக்கு மாற்றம்!



யாழ்ப்பாணம், ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கிருந்த கைதிகளில் 60 பேர் நேற்று யாழ்ப்பாணம்

07

## சர்வதேச ஊடகங்களில் இடம்பிடித்த நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல்!

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் மற்றும் அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் குறித்து முன்னணி சர்வதேச ஊடகங்கள் தீவிர கவனம் செலுத்தியுள்ளன.

1914 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட நீர்கொழும்பு சிறைச்சாலையில் கொள்ளளவைவிட அதிக கைதிகள் அடைத்து வைத்திருந்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சிறைச்சாலையில், போதைப்பொருள் கடத்தல்காரர்களை மையமாகக் கொண்ட இரு

07

## சிறைச்சாலை மோதல் விவகாரம் பல்துறை விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் பல்துறை விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர், சட்டமா அதிபர் திணைக்கள

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறைச்சாலை வன்முறைச் சம்பவம் குறித்து பாராளுமன்றில் அவசர விவாதம் வேண்டும்!

## எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் பிரேரணை

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல்கள் குறித்து நாடாளுமன்றத்தில் அவசர விவாதமொன்றை நடத்துமாறு கோரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த 31 பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் பிரேரணை ஒன்றை நேற்று சமர்ப்பித்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டு சிறைச்சாலை கலவரம் ஒன்றின் போது, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆற்றிய உரையொன்றை (2020 நவம்பர் 30ஆம் திகதியிட்ட ஹன்சாட் அறிக்கை - தொகுதி 280, இலக்கம் 07) சுட்டிக்காட்டி இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில், "சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பவர்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அவர்கள் விளக்கமறியலில் உள்ளவர்களாகவோ அல்லது தண்டனை பெற்ற கைதிகளாகவோ இருக்கலாம் ஆனால், அவர்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பிலேயே இருக்கிறார்கள்.

எனவே, அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள கைதிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உயிர் பாதுகாப்புத் தொடர்பிலான அடிப்படைப் பொறுப்பு அரசாங்கத்திற்கே உரியது" என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அன்று கூறியிருந்ததை எதிர்க்கட்சியினர் நினைவுபடுத்தியுள்ளனர்.

கடந்த ஜூலை 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைகளைக் குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சி, இந்த மோதல்களில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளன எனக் கூறியுள்ளது.

எனவே, இந்த மரணங்கள் மற்றும் காயங்கள் தொடர்பிலான முழுமையான பொறுப்பை தற்போதைய அரசாங்கமே ஏற்க வேண்டும். இவ்விடயத்தின் பாரதூரத்தன்மை மற்றும் அவசரத் தன்மையைக் கருத்திற்கொண்டு, இது குறித்து பாராளுமன்றத்தின் உடனடி கவனத்தை ஈர்ப்பதற்காக நிலையியற் கட்டளை 19(1) இன் கீழ் அவசர ஒத்திவைப்பு விவாதமொன்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என எதிரணி கையித்த பிரேரணையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 2030 இற்குள் "அஸ்வெசும" பயனாளிகளை வறுமையிலிருந்து மீட்பதே அரசின் இலக்கு

## பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ

கொழும்பு, ஜூலை. 08

2030 ஆம் ஆண்டுக்குள் தற்போதைய "அஸ்வெசும" பயனாளிகள் அனைவரையும் வறுமையிலிருந்து மீட்பதே அரசாங்கத்தின் இலக்காகும் என சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

"2030 ஆம் ஆண்டிற்குள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை முழுமையாக நிறுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனினும், இந்த திட்டம் முடிவுக்கு வருவதனால் நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிந்துவிட்டதாக அர்த்தமாகாது. இந்த திட்டம் நிறைவடைந்த பின்னரும் ஏழை மக்கள் இருக்கக்கூடும் என்பதால் தான், அவர்களுக்காக வாழ்வாதார வலுவூட்டல் திட்டங்களை நாம் தற்போது முன்னெடுத்து வருகிறோம்.

வெறும் பண உதவி வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக இந்த மக்களை 2030 ஆம் ஆண்டிற்குள் வறுமைக் கோட்டிலிருந்து மீட்டெடுப்பதே எமது முதன்மை நோக்கமாகும்" என பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

# சிறைக் கலவரத்தில் காயமடைந்த அதிகாரிகளை வைத்தியசாலையில் பார்வையிட்ட நீதி அமைச்சர்


கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறையில் காயமடைந்த அதிகாரிகளை அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

சிறைச்சாலையினுள் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தின்போது காயமடைந்து, நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வரும் சிறைச்சாலை அதிகாரிகளை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார நேரில் சென்று பார்வையிட்டார்.

வைத்தியசாலைக்குச் சென்ற அமைச்சர், காயமடைந்த அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் அவசர தேவைகள் குறித்து அங்குள்ள வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

நீர்கொழும்பு சிறையில் நிகழ்ந்த மோதலில் காயமடைந்த 23 சிறை அதிகாரிகள் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற அதே வேளை 54 கைதிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)



# சபாநாயகரை கடுமையாக சாடினார் ரோஹினி எம்.பி.

கொழும்பு, ஜூலை. 08

நாடாளுமன்ற விவாதங்களின் போது சபாநாயகரின் செயல்பாடுகள் குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று சபையில் காரசாரமான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

"இந்த பாராளுமன்றத்தில் சபாநாயகர்தான் ஒரு வேடிக்கையாக மாறியுள்ளார்" என அவர் சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற ஒழுங்குமுறைகள் மற்றும் விவாதங்களின்போது சபாநாயகர் நடுநிலையாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் மற்றும் விவாத நேர ஒதுக்கீடுகள் தொடர்பாக இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட நீண்ட வாக்குவாதத்தின்போதே இந்தத் காரசாரமான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்தின் மாண்பைப் பாதுகாக்கும் வகையில் உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைக்கவேண்டும் என இதன் போது சபாநாயகர் தரப்பில் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரிக்ரொக் ஊடாகப் பழகிய சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சிறுவன் கைது!

கொழும்பு, ஜூலை. 08

ரிக்ரொக் சமூக வலைதளம் ஊடாகப் பழகிய 14 வயது சிறுமியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக, 17 வயதுச் சிறுவனை களுத்துறை வடக்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யும்போது சிறுமியும் சந்தேகநபருடன் இருந்த நிலையில், பொலிஸார் சிறுமியை மீட்டதுடன் அவரிடம் வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி, மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சிறுமி, ரிக்ரொக் ஊடாகச் சந்தேக நபருடன் நட்பாகி, காதல் உறவை பேணி வந்துள்ளார்.

சந்தேக நபரான இளைஞர் சிறுமியின் வீட்டுக்குச் சென்று சில நாள்கள் தங்கியிருந்து அவரை துஷ்பிரயோகம் செய்ததுடன், பின்னர் புத்தளம் பகுதியில் உள்ள சிறுமியின் சகோதரியின் வீட்டிலும் வைத்து இரண்டாவது தடவையாக அவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அடுத்து வரும் 4 வாரங்கள் மிக அவதானம் மிக்கவை!

## டெங்கு குறித்து அமைச்சர் நளிந்த

கொழும்பு, ஜூலை. 08

டெங்கு நோய் குறித்து வெளியான அறிக்கைகளின் அடிப்படையில் அடுத்து வரும் நான்கு வாரங்களுக்கு மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் டெங்கு நோய்க்காக உருவாக்கப்பட்ட தடுப்பூசி நாட்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரை டெங்கு நோயால் 61,060 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் மாத்திரம் 5,663 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் இயக்குநர் கபில கன்னங்கர தெரிவித்தார். (அ)

# நீர்கொழும்புச் சிறைச்சாலை நிலைமை கட்டுப்பாட்டுக்குள்!

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியின் பாதுகாப்புக்காக பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையின் நிலைமையை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட மோதலில் பலத்த காயமடைந்த 20 பேர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், 58 பேர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
08.07.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆனி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மக்களின் விவேகத்தை நிந்தனை செய்யும் மகிந்த

அரசியலில் இருந்து ஒருபோதும் விலகப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மைக்காலமாக அடிக்கடி கூறிவருகிறார். கடந்த வார இறுதியிலும் கண்டியில் பௌத்த மத வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்களுடன் பேசியபோது அவ்வாறு அவர் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

நாட்டு மக்கள் தங்களுடன் இருக்கும் வரை அரசியலில் இருந்து தான் ஒருபோதும் விலகப் போவதில்லை என்றும் எதிரணி கட்சிகளை அணிதிரட்டி அரசாங்கத்துக்கு எதிராக பலம் பொருந்திய கூட்டணியொன்றை அமைக்கப் பாடுபடப் போவதாகவும் மகிந்த கூறினார். இரு மாதங்களுக்கு முன்னர் இவ்வருடம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் இருப்பதாகவும் அவர் கூறியிருந்தார். அதற்கு பிறகு அந்த திட்டம் குறித்து அவர் பேசவில்லை.

மகிந்தவுக்கு தற்போது 81 வயது. உடல்நலமும் முன்னரைப் போன்று இல்லை. இரு தடவைகள் பிரதமராகவும் இரு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் பதவி வகித்தபோதிலும், தவறான ஆட்சிமுறைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியினால் அவரது குடும்பம் அதிகாரத்தில் இருந்து நான்கு வருடங்களுக்கு முன்னர் தூக்கியெறிப்பட்ட போதிலும், அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராயில்லை.

தங்களது குடும்பத்துக்கென்று உருவாக்கிய பொதுஜன பெரமுனவின் தலைவராக இருந்து வரும் மகிந்த தனது அரசியல் வாரிசான மூத்த புதல்வன் நாமல் ராஜபக்ச ஆட்சியதிகாரத்துக்கு வருவதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும் வரை அரசியலில் தொடர்ந்து நிலைத்திருக்க விரும்புகிறார் போலும்.

ராஜபக்சாக்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லாமல் வாழ முடியாமல் இருக்கலாம். ஆனால், நாட்டு மக்களுக்கு மீண்டும் ராஜபக்சாக்களின் ஆட்சி தேவையா?

இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்திய வேறு குடும்பங்களும் இருந்தன. ஆனால், அந்த குடும்பங்களில் எதையுமே மக்கள் கிளர்ச்சி செய்து ஆட்சியதிகாரத்தில்

இருந்து தூக்கியெறிந்ததில்லை. ராஜபக்சாக்களுக்கு நேர்ந்த வரலாற்று அபகீர்த்தி போன்று இலங்கையின் வேறு எந்த அரசியல் குடும்பத்துக்கும் ஏற்பட்டதில்லை. அதற்கு பின்னரும் கூட மீண்டும் அதிகாரத்துக்கு தங்களால் வரமுடியுமென்று மகிந்த நம்புகிறார் அல்லது எதிர்பார்க்கிறார் என்றால் இலங்கை மக்களின் விவேகத்தை அவர் நிந்தனை செய்கிறார் என்பதே அர்த்தம்.

# அரசியல் - பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான பிணைப்பு எவ்வளவு தூரம் நீண்டுள்ளது?

கடந்த வாரம் கசிந்த ஓர் ஒலிப்பதிவு (audio clip), பாதாள உலகத்தினர் அரசியல் தரகர்க ளுக்கு பணம் செலுத்தத் தயாராக இருக்கும் வரை, தடுப்புக்காவல் ஊ கட்டளைகளை ரத்து செய்யவும் போதைப் பொருள் கடத்தல் மன்னன் ஒருவரை அதியயர் பாதுகாப்பு சிறை யிலிருந்து மாற்றவும் இறுதியாக அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளையே முற்றாகக் கைவிடவும் தகுந்தவாறு அரசியல் - பாதாள உலகப் பிணைப்பு நீண்டுள்ளது என்பதை வெளிக்காட்டிருக்கிறது.

இது தற்போது காவலில் உள்ள சந்தேக நபர்கள் மீது மட்டுமல்ல, ஒட்டுமொத்த அரசியல் மற்றும் நீதித்துறை கட்டமைப்பின் மீதும் சுமத்தப்பட்ட ஒரு கடுமையான குற்றச் சாட்டாகும்.

இலங்கையின் பாதாள உலகக் குழுவின் தலைவனான நதுன் சிந்தக விக்ரமரத்ன எனப் படும் 'ஹரக் கட்டா' சம்பந்தப்பட்ட பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இலஞ்ச ஊழல் வழக்கு தொடர்பாக, முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் மகனான ரக்கித ராஜபக்ச, ஐக்கிய மக்கள் சக்தியின் ஹோரண தொகுதி அமைப்பாளர் சரித் அபேசிங்க மற் றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் அருண ஸ்ரீ சனத்குமார ஆகியோர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட நிலையிலேயே, இந்த ஒலிப்பதிவும் கசிந்துள்ளது.

இந்த ஒலிப்பதிவு கசிந்த நேரம், அது பொது மக்களின் கருத்தை திசைதிருப்பும் நோக்கம் கொண்டது என்பதை உணர்த்தலாம். எனினும், ஒவ்வொரு சந்தேக நபரும் மிக விரைவில் ஒரு "அரசியல் பலிக்கடாவாக" மறுபிறவி எடுக்கும் ஓர் அரசியல் கலாச்சாரத்தில், இந்த ஒலிப் பதிவு அத்தகைய முயற்சிகளை முன்கூட்டியே தடுத்து விட்டது என்று நாம் பாதுகாப்பாக வாதிடலாம்.

ஆனாலும், கசிந்த ஒலிப்பதிவில் குறிப்பி டப்பட்டுள்ள சட்ட அமலாக்க அமைப்புக ளின் ஏதேனும் கூட்டுச்சதி நிரூபிக்கப்பட்டால், அது நீதிமன்ற செயல்முறையை பாதிக்க முயன்றது என்ற அடிப்படையில், நீதிமன்ற விசாரணையின் போது சந்தேகநபர்களுக்கு அது தற்செயலாக சாதகமாக அமைந்துவிடும் என்பதையும் நாம் இங்கு நோக்க வேண்டும். ஒரு நடுநிலையான பார்வையாளர், இத்தகைய சிறிய தொழில்நுட்ப விபரங்களுக்கு முக்கியத் துவம் கொடுப்பதுதான், பல இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளில் சந்தேகநபர்கள் சிறைத்தண் டனையிலிருந்து தப்பிப்பதற்கு பெரும்பாலும் உதவியாக இருந்துள்ளது என்பதையும் கவ னிப்பார்.

ஹரக் கட்டாவின் தடுப்புக்காவல் கட்ட ளையை நீக்குவதற்கும், அவரை அதியுயர் பாதுகாப்புடைய பூசா சிறைச்சாலையிலி ருந்து சாதாரண சிறைச்சாலைக்கு மாற்றுவ தற்கும் ஹரக் கட்டாவின் மனைவியான மதுஷிகா மதுவந்தியிடம் இருந்து 500 மில் லியன் ரூபாய் இலஞ்சம் கோரியதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த மூன்று சந்தேகநபர்கள் மீதும் குற்றம் சுமத்தியுள்ளது.

விசாரணைகளின்படி, 2023 மார்ச் மாதம் துபாய்க்குச் சென்றிருந்த இந்த மூன்று சந்தேக நபர்களும், துபாயில் வசிக்கும் நிர்மல் பண்டார எனப்படும் 'ஹெர்பி' என்பவரின் இல்லத்தில் மதுஷிகாவை சந்தித்துள்ளனர். இந்த சந்திப் பின் போது இலங்கையரான மிரிடிகம ருவான் என்பவரும் உடனிருந்துள்ளார். இவர் தற் போது இலங்கையில் காவலில் வைக்கப்பட் டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் போது, இலஞ்சத் தொகை 200 மில்லியன் ரூபாயாகக் குறைக்கப் பட்டதுடன், அதில் 100 மில்லியன் ரூபாய் முன்பணமாகப் பெறப்பட்டுள்ளது. இந்த நிதி சட்டவிரோத "உண்டியல்" பணப் பரிமாற்ற முறை மூலம் இலங்கைக்கு மாற்றப்பட்டுள் ளது. அதன்பின்னர், சந்தேகநபர்கள் காவலில் உள்ள பாதாள உலகப் போதைப் பொருள் கடத்தல்காரனின் மனைவியிடமிருந்து மேலும் 20 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளனர்.

இந்த ஒலிப்பதிவானது ரக்கித, சரித், ஹெர்பி மற்றும் மதுஷிகா ஆகிய சந்தேகநபர் களுக்கு இடையே இடம்பெற்ற பல தொலை பேசி உரையாடல்களை ஒன்றிணைத்து உரு வாக்கப்பட்டுள்ளது.

ஹரக் கட்டாவின் தடுப்புக்காவல் கட்ட ளையை நீக்குவதற்கு ஈடாக, உயர் அதிகாரிக ளுக்கு செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டதாக சந்தேகநபர்கள் கூறும் 100 மில்லியன் ரூபாய் ஏற்கனவே பெறப்பட்டமை பற்றி அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் "சரித்தின் நண்பரான பொலிஸ் மா அதிபர் தேசபந்து" என்று குறிப்பிட்டு, தேசபந்துவுக்கு 50 மில்லி யன் ரூபாய் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் குறித்தும் விவாதிக்கின்றனர்.

தனிப்பட்ட முறையில் கொலைக் குழுக் களை இயக்கியது உள்ளிட்ட பல விசாரணை களில் சிக்கியுள்ள சர்ச்சைக்குரிய முன்னாள் பொலிஸ் மா அதிபர் இது குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

**பேச்சுவார்த்தைகளின் போது, இலஞ்சத் தொகை 200 மில்லியன் ரூபாயாகக் குறைக்கப் பட்டதுடன், அதில் 100 மில்லியன் ரூபாய் முன்பணமாகப் பெறப்பட்டுள்ளது. இந்த நிதி சட்டவிரோத "உண்டியல்" பணப் பரிமாற்ற முறை மூலம் இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர், சந்தேகநபர்கள் காவலில் உள்ள பாதாள உலகப் போதைப் பொருள் கடத்தல்காரனின் மனைவியிடமிருந்து மேலும் 20 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளனர்.**

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தின் போது ஜனாதிபதியின் செயலாளராக இருந்த சமன் ஏக்கநாயக்கவின் பெயரும் இந்த ஒலிப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் விஜயதாச ராஜபக்ச நீதி அமைச்ச ராகப் பதவி வகித்தார்.

இருப்பினும், வாக்குறுதியளிக்கப்பட்ட காரியம் எதையும் சந்தேகநபர்கள் நிறை வேற் றத் தவறியதால், பின்னர் இந்த சுமுகமான உறவு அச்சுறுத்தலாக மாறியது. மதுஷிகா சந்தேகநபர்களை அச்சுறுத்தி, "எங்களிடம் 120 மில்லியன் ரூபாய் மோசடி செய்த எவரை யும் நாங்கள் நிம்மதியாக இருக்க விடமாட் டோம். நாங்கள் இப்போது ஒரு கடினமான சூழ்நிலையைக் கடந்து கொண்டிருந்தாலும், எங்களுக்கான நாளும் வரும்" என்று எச்சரிக்கிறார்.

விசாரணைகளின் மூலம் சொகுசு வீடுகள், பி.எம்.டபிள்யூ மற்றும் ரேஞ்ச் ரோவர் (Range Rover) ரக வாகனங்கள் போன்ற ஆடம்பரமான இலஞ்சக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளமை வெளிச்சத்திற்கு வந்து ள்ளது.

இந்த மூன்று சந்தேகநபர்களும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை இலங்கையின் சட்ட அமைப்பின் இருண்ட பக்கத்தை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த அண்மைய கைது நடவடிக்கை ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல, மாறாக அரிதாக வெளிச்சத்திற்கு வந்த ஒரு சம்பவமாகும் என்று எவரும் பாதுகாப் பாக வாதிடலாம்.

(மிகுதி அடுத்த இதழில்)

- ரங்க ஜயசூரிய (டெய்லி மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 08 புதன்கிழமை
பராபவ வருடம் - ஆனி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : நவமி




# இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் பிரச்னைகள் வந்து நீங்கும். எதிலும் கவனம் தேவைப்படும்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பாக நாள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலை ஆட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவை.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் உதவுவார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைசுற்றல் முழங்கால் வலி வந்து நீங்கும். உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

# ரின் இலக்கம் பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் நிற்க தேவையில்லை!

## யாழ். பிராந்திய ஆணையாளர் விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை. 08

ரின் இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகப் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நிற்பதைத் தவிர்த்து, நிகழ்நிலை முறை மூலம் அதனை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஏ.பி.குணதுங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை, பிராந்திய ஆணையாளர் நேற்று முன் தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

அண்மைய நாள்களாக மக்கள் நீண்ட வரிசையில் நிற்பது குறித்து அரசாங்க அதிபர் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியமைக்காக, ஆணையாளர் இதன்போது தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இந்த கலந்துரையாடலில், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டத்தின்படி, புதிய வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு, கட்டடத் திட்ட ஒப்புதலைப் பெறுவதற்கு, மோட்டார் வாகனப் பதிவு மற்றும் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு, நிலப் பதிவு அல்லது உரிமை மாற்றத்திற்கு மற்றும் கடன் அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு ரின் இலக்கம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு சென்று ஓ.ரி.பி. இலக்கத்தைப் பெற்றுத் தங்களது ரின் இலக்கத்தைப் பார்வையிட முடியும்.

இதுவரை பதிவு செய்யாதவர்கள், www.ird.gov.lk என்ற இணையத்தளம் மூலமாகவோ அல்லது விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பதிவுகளுக்கான சான்றிதழ்கள் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும், மேலதிக விபரங்களுக்கு 021-2217333 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் பிராந்திய ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழில் திறந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 08

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் தரவு சேகரிப்பும், அரசியல்வாதிகள் சமூக செயற்பாட்டாளர்களுடனான திறந்த கலந்துரையாடலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளதாக, வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜேம்ஸ் கபிலன் போல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான சரியான தகவல்கள் தரவுகள் இதுவரையில் இல்லை. நாம் வேலை வாய்ப்புக்களை கோரும் போது தரவுகள் கைவசம் இருந்தாலே, வேலை வாய்ப்பை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

செப்ரெம்பர் மாதமளவில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அது போட்டி பரீட்சை இன்றி நடைபெறவுள்ளதாகவும் அறிகிறோம். எனவே பட்டதாரிகள் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய ஆண்டு, அவர்களின் துறை சார்ந்த தரவுகள் கைவசம் இருந்தாலே வேலை வாய்ப்பை சிக்கல் இன்றி பெற்றுக்கொள்ள முடியும்.

தனியார் துறையிலும் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. சரியான தரவுகள் இல்லாததால், சரியானவர்களை இனம் கண்டு அந்த வேலைவாய்ப்பை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் வடமாகாண அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஊடாக சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. பட்டதாரிகள் தொடர்பிலான தரவுகள் இருந்தால் மட்டுமே அவர்கள் சார்பான துறைக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா கலையரங்குக்கு நேரில் வந்து தமது பட்டப்படிப்பு தொடர்பிலான விவரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்- என்றார்.

(அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் வருடம்தோறும் 5,000 சுகப்பிரசவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை. 08

யாழ். போதனா வைத்தியசாலையில் ஆண்டுதோறும் சுமார் 5,000 சுகப்பிரசவங்கள் நடைபெறுகின்றன. இச்சுகப்பிரசவங்கள் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுவதில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் முக்கியமான மற்றும் மறுக்க முடியாத பங்காற்றுகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பும் தொழில்முறை சேவையும் பாராட்டி கௌரவிக்கும் நோக்கில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பிற




சுகாதாரத் துறையினர் கலந்து கொண்டு, குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி, அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதிபதிகள் ஓய்வு வயது விவகாரத்தில் அரசாங்கத்துடன் சஜித் இரகசிய டீல்?

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு

கொழும்பு, ஜூலை. 08

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய அரசியல் உடன்பாடு உள்ளதா என்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள்ளேயே கடும் ஐயங்கள் எழுந்துள்ளன.

உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் ஓய்வு வயதை நீட்டிப்பதற்கான ஜனாதிபதியின் அரசியல் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ காட்டும் மெத்தனமான அணுகுமுறையை ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழு கடுமையாக விமர்சித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த அரசியல் விருப்பத்துக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் நேரடித் தலைமை வழங்காததால், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு உள்ளதா என்பது குறித்து கட்சிக்குள்ளேயே கடும் ஐயங்கள் எழுந்துள்ளன.

சமீபத்தில் கூட்டப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில், நீதித்துறை மீதான ஜனாதிபதியின் அழுத்தத்திற்கு எதிராக அரசாங்க ஆதரவு சிவில் சமூக அமைப்புகளும் சட்டத்தரணிகளும் வீதிகளில் இறங்கியுள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவரின் மௌனம் கட்சிக்கு பெரும் பாதகமாக அமைந்துள்ளது என்று பல மூத்த உறுப்பினர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் இலட்சக்கணக்கான சட்டத்தரணிகளை உடனடியாக கொழும்புக்கு அழைத்து ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைக்க முகாமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது.

நீதித்துறையில் அரசியல் தலையீட்டுக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து, சஜித் பிரேமதாஸ முன்னுக்கு வர வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் வயது வரம்புகளை திடீரெனத் திருத்தியமைத்தது முழு சட்ட அமைப்பின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்டும் குழு உறுப்பினர்கள், இதன் மூலம் உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள திறமையான, சிரேஷ்ட மற்றும் இளைய நீதிபதிகளின் தொழில் வாய்ப்புகளும் பதவி உயர்வு பெறுவதற்கான உரிமைகளும் குறைக்கப்படுகின்றன என்று வலியுறுத்துகின்றனர். (அ)

# கியூ.ஆர். எரிபொருள் முறை தடையின்றி தொடரப்படும்!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 08

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர் குறியீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறைமை எந்தவித தடையுமின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் எந்த வித தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் எதிர்காலத்திலும் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, தற்போதைய விநியோக முறைமையில் மாற்றங்கள் ஏற்படலாம் என பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை.

தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டு அளவை அதிகரிப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

மறுஅறிவித்தல் வரை தற்போதைய ஒதுக்கீட்டு எல்லைகளே தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்-என்றார். (அ)

# மனித நுகர்வுக்கு தகுதியற்ற 4,250 தொன் சீனி பறிமுதல்!

கொழுஅூ, ஜூலை. 08

பேலியகொடை, பெத்தியாகொட பகுதியில் மனித நுகர்வுக்குத் தகுதியற்ற 4,250 தொன் சீனியுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதாகக் கருதப்படும் பெருமளவிலான சீனி கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது, சுமார் 850 மில்லியன் ரூபாய் பெறுமதியான 85,000 சீனி மூடைகள், மொத்தமாக 4,250 தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடுவலை, அங்கொடை, பிலியந்தலை மற்றும் ஹற்றன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# வர்த்தகர்களிடம் பெருந்தொகை பணம் அபகரித்த இரண்டு சகோதரிகள் கைது!

கொழும்பு, ஜூலை. 08

பல்வேறு வர்த்தகர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகப் பெற்று, அதனை சிறைச்சாலைகளுக்குள் இருக்கும் குண்டர்களின் வழக்குகளுக்காகச் செலவிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த உடன்பிறந்த சகோதரிகள், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இருக்கும் எம்பிலிப்பிட்டிய ருவன் என்றழைக்கப்படும் பிரபல பாதாள உலகக்கும்பல் உறுப்பினரின் வழிகாட்டலின் கீழ் குறித்த சகோதரிகள் இருவரும் பல்வேறு வர்த்தகர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகப் பெற்றுள்ளனர்.

அவ்வாறு பெறப்படும் பணத்தைக் கொண்டு எம்பிலிப்பிட்டிய ருவன் உள்ளிட்ட குண்டர்களின் வழக்குச் செலவுகளைக் கவனிப்பது, பிணைத் தொகைகளை வைப்புச் செய்வது, வேறு நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை மாற்றம் செய்வது உள்ளிட்ட விடயங்களை குறித்த சகோதரிகள் மேற்கொண்டுள்ளனர்.

அதே முறையில் கிரிபத்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து பத்து லட்சம் ரூபா கப்பம் பெறுவதற்காக எம்பிலிப்பிட்டிய ருவன், சிறைச்சாலைக்குள் இருந்தே தொலைபேசி மூலம் அச்சுறுத்தியுள்ளார்.

குறித்த பணத் தொகை வைப்பிலிடப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்களின் அடிப்படையில் குறித்த சகோதரிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# சிறைச்சாலை மோதல் விவகாரம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை ஒன்றை நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணையை நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அதற்காக நேற்று முன் தினம் நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு தமது அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிய போதிலும், அங்கு நிலவிய அமைதியற்ற சூழல் காரணமாக விசாரணைகளை ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் சில நாள்களில் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக நிமல் ஜி. புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு நகரப் பகுதியில் அதிகாலை பெரும் தீ விபத்து!

## இரண்டு கடைகள் முற்றாக எரிந்து நாசம்

மட்டக்களப்பு, ஜூலை. 08
மட்டக்களப்பு நகரின் சென்றல் வீதி மற்றும் பஸார் வீதியில் இன்று (07) அதிகாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாக எரிந்து சாம்பலானதுடன், மேலும் ஐந்து கடைகள் சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை சுமார் 5.00 மணியளவில் தீ பரவியதையடுத்து, மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் பொலிஸ் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் நான்கு மணிநேரப் போராட்டத்தின் பின்னர், காலை 9.00 மணியளவில் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



தீ விபத்தில் சென்றல் வீதியில் அமைந்திருந்த பல வியாபார நிலையங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து, சென்றல் வீதி மற்றும் பஸார் வீதியில் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

தீ விபத்துக்கான காரணம் மற்றும் சேத விவரங்கள் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சாய்ந்தமருதில் விபத்து தவிர்ப்பதற்கான விழிப்புணர்வு

அம்பாறை, ஜூலை. 08
நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 11ஆவது தேசிய காயம் தடுப்பு வாரத்தை முன்னிட்டு, சாய்ந்தமருதில் பொதுமக்களுக்கான விசேட வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன் தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஜூலை 06 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி "தேசிய காயம் தடுப்பு வாரமாக" அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் முதலாம் நாளான நேற்று முன் தினம் "சாலைப் பாதுகாப்பு நாள்" முன்னெடுக்கப்பட்டது.



இதனை முன்னிட்டு, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் வழிகாட்டலின் கீழ், சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு உத்தியோகத்தர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை சாய்ந்தமருது பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சாய்ந்தமருது பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து வீதியால் பயணித்த சாரதிகள் மற்றும் பாதசாரிகளுக்குப் பாதுகாப்பு ஆலோசனைகளை துண்டுப்பிரசுரங்கள் மற்றும் நேரடி அறிவுறுத்தல்கள் வழங்கினர். (அ)

### நீர்கொழும்பு சிறைக் கலவரம்;

## கட்டுவெல்லகம சுரேஷ் பூஸா சிறைக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை. 08
நீர்கொழும்பு சிறைக் கலவரத்தைத் தூண்டியதாகக் கூறப்படும் கட்டுவெல்லகம சுரேஷ் என்ற சந்தேகநபர் பூஸா சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாதாள உலகக் குழு உறுப்பினர் கெஹல்பத்ர பத்மேயின் நெருங்கிய கூட்டாளி எனக் கூறப்படும் குறித்த நபர் மீது, கூர்மையான ஆயுதங்களால் தாக்குதல், கொள்ளை, போதைப் பொருள் வைத்திருத்தல் மற்றும் விற்பனை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டு நாரம்மல பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், அவருக்கு எதிரான வழக்குகள் நீர்கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணையிலுள்ளன. (அ)

## டீசலுக்கு பதில் மண்ணெண்ணெய் பயன்படுத்தி பஸ் செலுத்திய மூவருக்கு ரூபா 360,000 அபராதம்

அம்பாறை, ஜூலை. 08
டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் பஸ்களை இயக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மூவருக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சோதனை நடவடிக்கையில் சிக்கிய மூவருக்கும் தலா 120,000 ரூபா வீதம், மொத்தம் 3,60,000 ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்முனை போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் விஜேரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட வாகன சோதனையின்போதே இந்த பஸ்கள் முற்றுகையிடப்பட்டனது.

டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஊற்றி சட்டவிரோத முறையில் பொதுப் போக் குவரத்தில் ஈடுபட்டமை தொடர் பான குற்றச்சாட்டின் கீழ் சந்தே கநபர்களுக்கு எதிராக கல்முனை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் இந்த தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## நியூசிலாந்தில் வயோதிபப் பெண் பலாத்காரம் இலங்கையருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை!

வெலிங்டன், ஜூலை. 08
நியூசிலாந்தில் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் பணியாற்றிய இலங்கையரான நிலுஷன் ஜயங்க சில்வா கிந்தோட்ட விதானகே என்பவருக்கு, முதிய பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்ததற்கும், மற்றொரு முதிய பெண்ணை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததற்கும் 10 ஆண்டுகள் 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிறைஸ்ட்சேர்ச் மாவட்ட நீதிமன்றம் கடந்த மே மாதத்தில் இந்தத் தீர்ப்பை வழங்கிய நிலையில், அவரின் அடையாளத்தை வெளியிடத் தடை விதித்திருந்த நீதிமன்ற உத்தரவு நேற்று முன் தினம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

அவர் பணியாற்றிய முதியோர் பராமரிப்பு நிலையத்தில் இரண்டு முதிய பெண்களை இலக்காகக் கொண்டு பாலியல் குற்றங்களை புரிந்ததாக குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளார். எனினும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக அந்த பராமரிப்பு நிலையத்தின் பெயர் வெளியிடப்படவில்லை.

தண்டனை வழங்கிய நீதிபதி ஜேன் பாரிஷ், உடல் மற்றும் மனநிலை காரணமாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்த பெண்களுக்கு எதிராக, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருந்த பராமரிப்பாளர் இவ்வாறான குற்றங்களைச் செய்தது மிகக் கடுமையான நம்பிக்கைத் துரோகம் எனக் குறிப்பிட்டார்.

மேலும், 11 வயதுச் சிறுமியிடம் தனது வாகனத்தை நிறுத்தி சிகரெட் மற்றும் பணம் வழங்குவதாகக் கூறி வாகனத்தில் ஏறுமாறு அச்சுறுத்திய சம்பவம் தொடர்பிலும் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சிறுமி அங்கிருந்து தப்பிச் சென்று வாகன இலக்கத்தை பதிவு செய்து தனது தாயிடம் தெரிவித்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

குற்றவாளி தனது செயல்களுக்கு எந்தவித மனவருத்தத்தையும் வெளிப்படுத்தவில்லை என்றும், தண்டனையின் மூன்றில் ஒரு பங்கை அனுபவித்த பின்னர் அவரை இலங்கைக்கு நாடு கடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஆண்டின் காலாண்டு பகுதியில் விபத்தில் 1,424 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை. 08
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 1,424 பேர் உயிரிழந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

ஜனவரி 01ஆம் திகதி முதல் ஜூலை 05ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 1,355 உயிராபத்துக்களை ஏற்படுத்தும் விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், 2025ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இம்முறை மொத்த வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 108 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 ஆகவும் அதிகரித்துள்ளதால், இது மிகவும் பாரதூரமான நிலை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கு சாரதிகளின் கவனயீனம், அஜாக்கிரதை, அதிக வேகம், வீதிகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் வாகனங்களைச் சரியாகப் பராமரிக்காமை காரணமாக ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் பிரதான காரணங்களாகும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போதைய புள்ளிவிவரங்களின்படி, இந்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் பாதசாரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதன்படி, கடந்த 7 மாத காலப் பகுதியில் மட்டும் 488 மோட்டார் சைக்கிள் சாரதிகளும், 484 பாதசாரிகளும் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். (அ)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் உயிரிழப்பு குறித்து விசாரணை ஆரம்பம்

அம்பாறை, ஜூலை. 08
பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் போதைப்பொருள் தொடர்பில் கைதான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சென்றதுடன் மேலதிக விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர் போதைப்பொருள் உட்கொண்டு உயிரிழந்தாரா? அல்லது தடுத்து வைக்கப்பட்டவேளை பொலிஸாரினால் தாக்கப்பட்டு உயிரிழப்பு இடம் பெற்றதா? என பல கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறையில் நவீன...

கைதிகளுக்கு இடையே திடீரென மோதல் வெடித்தது. இதில் 35 கைதிகள் காயமடைந்ததுடன், இரண்டு கைதிகள் உயிரிழந்தனர். சிறை அதிகாரிகளின் உடனடித் தலையீட்டினாலும், சமரசப் பேச்சுகளினாலும் அன்றைய தினம் மாலை நிலைமை தற்காலிகமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும், அதற்கு அடுத்த நாள் காலை கைதிகளுக்கு உணவு வழங்கி, அவர்களை நீதிமன்றக் கடமைகளுக்காகத் தயார்ப்படுத்தும்போது, மிகக் குறுகிய நேரத்தில் மீண்டும் ஒரு பயங்கர மோதல் வெடித்தது. சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதப் பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக, சிறை நிர்வாகத்துக்கு இரகசியத் தகவல் வழங்கிய ஒற்றர்களாகச் செயல்பட்ட கைதிகளைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான பழிவாங்கும் நடவடிக்கை என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த வன்முறையின்போது கைதிகள் அனைவரும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட குழுவினர் திட்டமிட்டு சிறையிலுள்ள சி.சி.ரி.வி. கமெராக்களை அடித்து நொருக்கியுள்ளனர். மேலும், பல மில்லியன் ரூபாய் மதிப்புள்ள நவீன ஸ்கானர் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களையும் முழுமையாக அழித்துள்ளனர்.

இந்த வன்முறையைத் தடுக்க முயன்ற சிறைத்துறை அதிகாரிகள் மீது கைதிகள் கல், தடி மற்றும் இரும்புக் கம்பிகளால் மிருகத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் சிலர் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளனர்.

மேலும், சிறையின் முக்கிய இரும்பு நுழைவாயில்களை உடைத்துக்கொண்டு, வெளிப்பகுதியிலுள்ள மரக்கதவு வரை கைதிகள் முன்னேறி வந்துள்ளனர். அவர்கள் சிறை வளாகத்தை விட்டு வெளியேறியிருந்தால் பொதுமக்களுக்கும், சொத்துக்களுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும். அத்துடன், வன்முறையில் ஈடுபட்ட கைதிகளின் கைகளுக்குச் சில ஆயுதங்களும் கிடைத்துள்ளன. அவை சிறையின் ஆயுதக் கிடங்கில் இருந்து எடுக்கப்பட்டவையா அல்லது அதிகாரிகளிடமிருந்து பறிக்கப்பட்டவையா என்பது குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இச்சம்பவம் தொடர்பான முழுமையான விவரங்கள், நியமிக்கப்பட்டுள்ள விசேட விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படும்.-என்றார். (அ)

## உளவுத் தகவல்...

சிறைச்சாலைகளுக்கு புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து இவ்வாறான உளவுத் தகவல்களை கிடைப்பது வழமை எனவும், எனினும் இந்த தாக்குதல் தொடர்பில் எவ்வித முன்னறிவிப்புகளோ உளவு தகவல்களோ கிடைக்கவில்லை என தம்மால் உறுதியாக கூறமுடியும் என அவர் தெரிவித்தார். (அ)

## துப்பாக்கிச் சூடு...

இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளின் படி இரண்டு பிரதான நுழைவாயில்கள் காணப்படுகின்றன. முதலாவதாக இரும்பினாலான நுழைவாயிலும், இரண்டாவதாக பலகையினாலான நுழைவாயிலும் அமைந்துள்ளன.

இந்த இரண்டு நுழைவாயில்களுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே உடற்பரிசோதனை மற்றும் பொதிகள் பரிசோதனைக்கான ஸ்கானிங் இயந்திரங்கள் மற்றும் தொடர்பாடல் வலையமைப்புகள் உள்ளிட்ட பல பெறுமதிமிக்க உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது, கைதிகள் முதலாவது இரும்பு நுழைவாயிலை முழுமையாக உடைத்துக் கொண்டு, அடுத்ததாக உள்ள பலகையினாலான நுழைவாயிலை நோக்கி வந்துள்ளனர்.

அந்த பலகை நுழைவாயிலையும் உடைத்துக்கொண்டு அவர்கள் வெளியில் தப்பியிருந்தால், சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விபரீதங்களையும் அழிவுகளை யும் இந்தத் தருணத்தில் மதிப்பிடவே முடியாது.

அதிகாரிகள் தங்களது உயிரைப் பணையம் வைத்து அந்த நேரத்தில் அவ்வாறு செயற்படாமல் இருந்திருந்தால், இதைவிடப் பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும்.

சமூக ஊடகங்களில் பரவும் காணொளியில், அதிகாரி ஒருவர் பலகையினாலான நுழைவாயிலில் உள்ள சிறிய துவாரத்தின் ஊடாக துப்பாக்கிச் சூடு நடத்துவது மட்டுமே வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிகிறது.

ஆனால், அதற்குள் இரும்பு நுழைவாயிலை உடைத்துக் கொண்டு கைதிகள் பலகையினாலான நுழைவாயில் வரை வந்துவிட்டனர் என்பதே உண்மை நிலையாகும்.

மேலும், அந்த தருணத்தில் கலவரத்தைத் தணிப்பதற்காக உள்ளே சென்ற எமது சிறைச்சாலை அதிகாரிகள் பலரும் கைதிகளுக்கு இடையே சிக்கியிருந்ததோடு, அவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனவே, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே அதிகாரிகள் அந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியேற்பட்டது-என்றார். (அ)

## சிறைச்சாலை வன்முறைக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட ஆரம்ப கட்ட சம்பவத்தை முறையாக கையாண்டிருந்தால், திங்கள்கிழமை நிகழ்ந்த பாரிய உயிர்ச்சேதங்களை தடுத்திருக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண மட்டங்களில் சட்டமா அதிபர் அலுவலகங்களை நிறுவுதல்,வழக்குத் தாக்கல் செய்வதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்குதல், சட்டமா அதிபர் திணைக்களத்தின் தாமதங்களை கண்டறிய விசேட பாராளுமன்ற ஒம்புட்ஸ்மனை நியமித்தல், போன்ற எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை என அவர் சாடினார்.

சிறைச்சாலைகளில் கைதிகளின் நெரிசலுக்கு அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் நிலவும் தாமதமே முக்கிய காரணமாகும். தற்போது அங்கு வரும் ஒரு மாதிரி அறிக்கையைப் பெற ஒரு வருடத்திற்கும் மேலாகிறது என்றும், இதனால் ஒட்டுமொத்த கட்டமைப்புமே சீர்குலைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து முதல் மாதத்திலேயே பிணை வழங்கும் அதிகாரத்தை மீண்டும் மேல் நீதிமன்றத்திற்கு வழங்குமாறு கோரப்பட்டபோதிலும், இரண்டு வருடங்களாகியும் அதற்குரிய சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சர் தவறியுள்ளார். சிறைச்சாலையில் அவசர நிலைமை ஏற்பட்டபோது, விசேட அதிரடிப் படை அல்லது இராணுவத்தினரை உடனடியாக ஈடுபடுத்தி பாதுகாப்பை உறுதி செய்ய அமைச்சர் தவறிவிட்டார்.

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பது தொடர்பான மாற்று பேச்சுவார்த்தைகளில் மும்முரமாக இருந்த அமைச்சர் உள்ளிட்ட குழுவினர், தொலைபேசிகளைக்கூட நிறுத்தி வைத்திருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

"பொறுப்பை ஏற்பது வேறு, பொறுப்புக் கூறுவது வேறு. அமைச்சருக்கு வெட்கமும் அச்சமும் இருந்தால் உடனடியாக பதவியை ராஜினாமா செய்துவிட்டு நடுநிலையான விசாரணைக்கு இடமளிக்க வேண்டும்.

இல்லையெனில் ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த அமைச்சரை பதவியில் இருந்து நீக்க வேண்டும்" என அவர் வலியுறுத்தினார். (அ)

## சிறைச்சாலை சம்பவத்தில்...

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிரான நடவடிக்கை என்பவற்றில் அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டுவருகின்றது. இவர்களுடன் தொடர்புபட்ட ஊழல் மிக்க அரசியல்வாதிகள் வெளியில் உள்ளனர். அவர்களுக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, நீர்கொழும்பு சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் எமக்கு சந்தேகம் உள்ளது. போதை ஒழிப்பு மற்றும் பாதாள குழுவுக்கு எதிராக செயல்படும் அரசு மீது தொடுக்கப்பட்ட நடவடிக்கையா என்ற சந்தேகமும் உள்ளது.எனவே, விசாரணைகள் மூலம் உண்மை கண்டறியப்பட வேண்டும் எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இரவுவேளையிலேயே வன்முறையை இலகுவில் செய்யலாம். ஆனால் அப்படி நடக்கவில்லை. இரவு நிலைமை அமைதியாக இருந்தது. ஆனால் காலையில் திடீரென அசம்பாவிதம் நடந்துள்ளது. எனவே, இது திட்டமிட்ட செயலா என்ற ஐயப்பாடும் உள்ளது எனவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் நேற்று குறிப்பிட்டார். (அ)

## சிறைச்சாலை மோதல்...

அதிகாரி மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஆகியோரைக் கொண்ட மூவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியனவும் தனித்தனியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் முன்கூட்டியே எந்தவித புலனாய்வு தகவலும் கிடைக்கவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கைதிகளுக்கு இடையிலான மோதலை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்ததாகவும், பின்னர் சில கைதிகள் போதைப்பொருள் மாத்திரைகளை பயன்படுத்தியிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அனைத்துச் சிறைச்சாலை...

நிலைமை குறித்து பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த போதே நீதியமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

## சர்வதேச ஊடகங்களில்...

குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலே வன்முறைக்குக் காரணம் என சர்வதேச செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் நிலைமையை கட்டுப்படுத்த தீவிரமாக முயற்சித்துள்ளனர். எனினும் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஏழு பேர் உட்பட சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் துப்பாக்கிச் சூடு மற்றும் வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பி.பி.சி. செய்திச் சேவை இது குறித்து செய்தி வெளியிடுகையில், 2 நாள்களாக நீடித்த இந்த வன்முறை, இலங்கையின் சிறைச்சாலை அமைப்பில் நிலவும் அதிக நெரிசலை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் குழுக்களுக்கு இடையே தொடங்கிய மோதல், பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் தப்பிச் செல்ல முயற்சிப்பதிலும், பெண் கைதிகள் சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறி நடத்திய போராட்டத்திலும் முடிவடைந்தாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அல் ஜசீரா செய்திச் சேவை தனது செய்தியில், இந்தச் சம்பவத்தின் மனிதாபிமானப் பக்கத்தையும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியான நிலையையும் முன்னிலைப்படுத்தியது.

நீர்கொழும்பு வைத்தியசாலையின் பணிப்பாளர் புஷ்பா கமல்கேயை மேற்கோள் காட்டி, காயமடைந்த கைதிகள் பொலிஸ் பஸ்களில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும், சடலங்கள் பொறுப்பேற்கப்படுவதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் தனது அறிக்கையில், கொழும்புக்கு வடக்கே அமைந்துள்ள நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட இந்த நிலைமை, பல தசாப்தங்களில் பதிவான மிக மோசமான வன்முறைச் செயல் என வலியுறுத்தியது.

பிரித்தானியாவின் கார்டியன், பாகிஸ்தானின் டான் மற்றும் இந்தியாவின் என்.டி.ரிவி போன்ற ஊடகங்களும் வன்முறையின் தீவிரத்தையும் வெளிப்படுத்தின. (அ)

## தனியாருக்கு உரிய...

இடம்பெறவுள்ளதாகவும், அதனை தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்று திரளுமாறும், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் முரளிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும், மக்களின் காணிகளை அபகரிப்பதை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இந்த அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. ஆனால் இதுவரை எந்த காணிகளும் விடுவிக்கப்படவில்லை. மக்களின் காணிகளை மக்களுக்கே பெற்றுக் கொடுக்க வேண்டும். இதற்காக நாளை மருதங்கேணியில் இடம்பெறவுள்ள காணி அளவீட்டை தடுப்பதற்காக அனைவரும் ஒன்று திரளவேண்டும்-என்றார். (அ)

## நீர்கொழும்பிலிருந்து 60...

சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த இரு தினங்களாகக் கைதிகளுக்கு இடையில் இடம்பெற்ற பயங்கர மோதல்களில் சிறைக் காவலர்கள் உட்பட 27 பேர் உயிரிழந்துள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கோரச் சம்பவத்தையடுத்து, நீர்கொழும்பு சிறைச்சாலை அமைந்துள்ள பகுதி முழுவதும் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

இதன் காரணமாக, அங்குள்ள கைதிகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கிலும் நீர்கொழும்பு சிறையிலுள்ள கைதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்த அவசர இடமாற்ற நடவடிக்கையின் அடிப்படையிலேயே, பலத்த பாதுகாப்புடன் 60 கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நீர்கொழும்பு சிறை மோதலின்போது அதிரடிப்படையினர் சூடு நடத்தினரா?

## சபையில் காவிந்த ஜயவர்தன எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜூலை. 08

பொதுமக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாக இருக்கும் நிலையில், நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலின் பின்னணி மற்றும் அங்கு விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது, சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட சுமார் 25 பேர் வரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்த அவர், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்த மோதலின்போது, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சீருடையை ஒத்த ஆடை அணிந்த அதிகாரி ஒருவர் சிறைச்சாலையின் உள்பகுதியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் காணொளிப் பதிவு ஒன்று வெளியாகியுள்ளதாக காவிந்த ஜயவர்தன சபையில் குறிப்பிட்டார்.

இந்த குறிப்பிட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக சிறைச்சாலைக்குள் எவருக்கேனும் உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (அ)

# “பழிவாங்கல் என்பது ஒருபோதும் சிறந்த ஒரு ஆட்சியாக அமையாது”

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி சாடல்



கொழும்பு, ஜூலை. 08

அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளையும், தமக்கு முன்னர் பதவியிலிருந்தவர்களையும் கைது செய்வதிலும், பழிவாங்குவதிலும் மட்டுமே தனது முழு நேரத்தையும், அதிகாரத்தையும் செலவிடுவதால் நாட்டின் உண்மையான நிர்வாகச் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கொடூர மோதலைத் தொடர்ந்து, “பழிவாங்கல் ஆட்சியாகும் போது” என்ற தலைப்பில் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது தீவிரமடைந்து வரும் டெங்கு நோய் பரவல், சிறைச்சாலைகளின் கடுமையான நெருக்கடி, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கான நியாயமான விலை மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற மக்களின் அத்தியாவசியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அரசாங்கத்திடம் எந்தவொரு முறையான கொள்கையோ அல்லது திட்டங்களோ இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவரைக் கைது செய்வதோ அல்லது சிறையிலடைப்பதோ ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக மாறலாமே தவிர, அது அரசாங்கத்தின் சாதனையாகாது என அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கைவிலங்கு என்பது சுகாதாரக் கொள்கையோ, விளக்கமறியல் உத்தரவு என்பது விவசாயக் கொள்கையோ அல்லது சிறைச்சாலை என்பது நல்லாட்சிக்கான சான்றோ அல்ல என்றும், பழிவாங்கலால் டெங்குவை ஒழிக்கவோ, பொருளாதாரத்தை வளர்க்கவோ முடியாது என்றும் குறிப்பிட்டார்.

விசாரணைகளும் கைதுகளும் அரசியல் பசிக்கு ஏற்ப அமையாமல், நம்பகமான ஆதாரங்களின் அடிப்படையில் சட்டம் தன் கடமையைச் சுயாதீனமாகச் செய்ய அனுமதிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அரசியல் அதிகாரம் என்பது தற்காலிகமானது என்பதை தற்போதைய ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என எச்சரித்துள்ள அவர், இன்று மற்றவர்களை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தும் அதே அதிகார இயந்திரம், நாளை மற்றொருவர் கைக்கு மாறும்போது தமக்கெதிராகவும் திரும்பலாம் என்பதை உணர்ந்து, பழிவாங்கலை விடுத்து நல்லாட்சியை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (அ)

# ஆடி அமாவாசை தினத்தை விடுமுறை தினமாக்குங்கள்!

## இந்துமத பீடம் பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 08

இந்துக்கள், தமது முன்னோர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் நாளான ஆடி அமாவாசை தினத்தை பொது விடுமுறை நாளாக அறிவிக்குமாறு, சர்வதேச இந்துமத பீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வருடத்துக்கான ஆடி அமாவாசை விரத நாள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரவுள்ள நிலையில், இந்த தினத்தை விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவசிறீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

இந்த புனிதமான ஆடி அமாவாசை விரத நாள், உயிர்நீத்த தமது முன்னோர்களுக்காக விரதம் இருந்து நீர் நிலைகளில் தர்ப்பணம் செய்து தான தர்மங்கள் செய்து சிவ வழிபாடு செய்வதற்கான புண்ணியமான நாளாகும்.

இந்த ஆடி அமாவாசை விரதம் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

எனவே, ஆடி அமாவாசை விரத நாளை, இந்துமத அரச ஊழியர்களுக்கும், தனியார் துறையினருக்கும், மாணவர்களுக்கும் விடுமுறை நாளாக அறிவித்தால் இந்து மக்களுக்கு மிகவும் பெருமையான விடயம் என சர்வதேச இந்துமத பீடம் தெரிவித்துள்ளது. (அ)

# சிறை மோதலின் உயிரிழப்பு எண்ணிக்கை 27 ஆக உயர்வு

கொழும்பு, ஜூலை. 08

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு கைதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, நீர்கொழும்பு சிறை மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 7 சிறை அதிகாரிகளும், 20 கைதிகளும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சஷீந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட மூவருக்கு குற்றப்பத்திரிகை!

கொழும்பு, ஜூலை. 08

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்தக் குற்றப்பத்திரிகைகள், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் நேற்று பிரதிவாதிகளிடம் கையளிக்கப்பட்டன. குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதிவாதிகள் ஒவ்வொருவரையும் தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார்.


அத்துடன், பிரதிவாதிகளின் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் நீதிமன்றம் தடை விதித்தது.

மேலும், பிரதிவாதிகளின் கைரேகை அடையாளங்களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், வழக்கின் முதற்கட்ட விசாரணை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுடன், சேபாலிகா சமன்குமாரி மற்றும் கீர்த்தி பண்டார கொடகம ஆகியோர் ஏனைய பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

# இலங்கைக்கு கடத்த முயன்ற பந்தயப் புறாக்கள் பறிமுதல்!

## பாம்பன் பகுதியில் இருவர் கைது!



சென்னை, ஜூலை. 10

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியில் இருந்து நாட்டுப் படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற 120 பந்தய புறாக்களை கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகம் மற்றும் பாம்பன் பாலம் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கியூ பிரிவு பொலிஸார், சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற காரொன்றைச் சோதனையிட்டபோது அதில் ஆறு இரும்புக் கூடைகளில் 120 புறாக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து காருடன் புறாக்களையும் கைப்பற்றிய பொலிஸார், மதுரை பகுதிகளைச் சேர்ந்த இருவரை கைதுசெய்து மேலதிக விசாரணைகளுக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணைகளில், குறித்த பந்தயப் புறாக்கள் கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக மதுரையில் இருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நாட்டுப் படகு ஒன்று பொலிஸாரைக் கண்டதும் கடலுக்குள் தப்பிச் சென்றுள்ளதாகவும், அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடல் வழியாக பந்தய புறாக்கள் கடத்த முயற்சிக்கப்பட்டு பிடிபட்டுள்ளமை இதுவே முதல் முறை என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மொறட்டுவை பல்கலை இரு வாரங்களுக்கு மூடல்

கொழும்பு, ஜூலை. 08

மொறட்டுவை பல்கலைக்கழக வளாகத்தில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு, நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பல்கலைக்கழகத்தை இரண்டு வாரங்களுக்குத் தற்காலிகமாக மூட பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது பல்கலைக்கழகத்தில் மிக முக்கியமான பரீட்சைகள் நடைபெற்று வரும் நிலையில், காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த மாணவர் குழுவொன்றும் அந்தத் தேர்வுகளில் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் வைரஸ் மேலும் பரவுவதற்கான அதிக ஆபத்து நிலவியதால், மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகத்தை மூடவேண்டிய கட்டாயம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

இருப்பினும், பல்கலைக்கழகம் பௌதீக ரீதியாக மூடப்பட்டாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு எந்தத் தடையும் ஏற்படாது என நிர்வாகம் வலியுறுத்துகிறது.

அதன்படி, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு அனைத்து விரிவுரைகளையும் இணையவழியில் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சாதாரண கல்வி நடவடிக்கைகள் மற்றும் தேர்வுகள், எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் வழமை போன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிடெட் நிறுவனத்தினரால் 08.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org